# ஹட்டன் திக்கோயா நகர சபை

## நுவரஎலிய மாவட்டம்

--------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜுலை 06 திகதி நகர சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, ஹட்டன்-திக்கோயா நகர சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

----------------------------------------

மீளாய்வாண்டிற்காக சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களுடன் அந் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டுக் கொள்கைகளை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி வாரத்திற்காக நன்கொடையாக கிடைத்திருந்த டிரக்டர் வண்டியின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

--------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 10,074,860 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்திருத்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 5,319,596 ஆக காணப்பட்டது.

1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

--------------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 42,018,971 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருடத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 28,992,296 ஆக காணப்பட்டது.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

--------------------------------------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 32,669,345 பெறுமதியான 05 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணிப்பீடு அறிக்கை சமர்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

-----------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நி.பி. 371(2) | 1987 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை 94 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொண்டிருந்த ரூபா 5,507,610 இற்கான முற்பணங்கள் தீர்த்திருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV பிரிவுகள் 1:6 மற்றும் 04 | சபையின் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள மற்றும் ஓய்வு பெற்றுள்ள 03 நபர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 39,727 இற்கான பதவியணிக் கடனை அறவீடு செய்தவற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | 1980 திசெம்பர் 31 திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் 46 கொண்ட சுற்று நிருபம் | சபைக்கு சொந்தமான கடைகள் 2006 ஆம் ஆண்டின் பின்னர் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு வாடகையினை மறுசீரமைப்பு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,765,173 ஆக

காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,604,958 ஆக காணப்பட்டது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

---------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான மிகையினை முன்னைய ஆண்டின் மிகையுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 8,160,215 இற்கான அதிகரிப்பு ஒன்று காணப்பட்டதுடன் அதற்காக 2014 ஆண்டின் போது 07 வருமான விடயங்களில் வருமானம் நூற்றிற்கு 05 முதல் நூற்றிற்கு 532 வரையான வீச்சில் அதிகரித்தலும், 05 செலவு விடயங்களில் நூற்றிற்கு 12 முதல் நூற்றிற்கு 78 வரையான வீச்சில் குறைதலும் காரணமாகியுள்ளது.

2.3 வருமான நிருவாகம்

--------------------------------

2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

------------------------------------------------------------------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டு தொடர்பாக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு,

| | | | | | 2014.12.31 திகதியில் உள்ளவாறு நிலுவை | | |
|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | 2014.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை | 2014.12.31 திகதியில் உள்ளவாறு நிலுவையில் இருந்து அறவீடுகள் | 2014 ஆண்டின் போது பில் போடப் பட்டவைகள் | ஆண்டின் போது பில் போடப் பட்டவைகளின் அறவீடுகள் | 2014.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவையில் இருந்து | ஆண்டிற்கான பில் போடப் பட்டவைகளில் இருந்து | மொத்த நிலுவை |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி | 3,655,500 | 2,210,401 | 7,248,678 | 6,077,350 | 1,445,099 | 1,171,328 | 2,616,427 |
| கடை வாடகை | 6,119,579 | 4,477,107 | 11,114,434 | 8,826,091 | 1,642,470 | 2,228,347 | 3,930,817 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 220,838 | 220,712 | 2,061,239 | 1,968,885 | 126 | 92,353 | 92,479 |

2.3.2 வாடகை

--------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1993 ஆண்டு முதல் 2009 ஆண்டு வரையான காலம் தொடர்பாக நிலுவை இறைச்சிக் கடை வாடகை வருமானம் ரூபா 555,420 தொகையினை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஹட்டன் புதிய சந்தையின் முன்னர் காணப்படும் 06 மீன் கடைகளில் இருந்து 2014 திசெம்பர் 31 திகதி அளவில் ரூபா 172,350 அறவிடப்பட வேண்டியிருந்ததுடன்

அவற்றில் 05 கடைகளுக்காக 2014 ஆண்டின் போது பணம் ஏதும் செலுத்தியிருக்கவில்லை எனினும் நிலுவை தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

(இ) சபைக்கு சொந்தமான திக்ஓயா எம்.ஏ.எஸ் அபூசாலி மண்டபத்தை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் 2014 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 525,272 இற்கான தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது எனினும் அப்பணத்தை அறவீடு செய்தல் தொடர்பாக சபையினால் எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(ஈ) முறையான கொள்வனவு நடைமுறை ஒன்றிற்கு மாற்றமாக ஹட்டன் சந்தையில் 13 ஆம் இலக்க மாட்டு இறைச்சிக் கடை வாடகை கொடுத்தல் தொடர்பாக அநியாயம் இழைக்கப்பட்ட ஒப்பந்தக்காரரினால் சட்ட நடவடிக்கை எடுத்திருந்தார். அதன் பிரகாரம் ரூபா 100,000 இற்கான சட்டவல்லுனர் கட்டணம் ஒன்றினை மேற் கொள்வதற்கு நேரிட்டிருந்ததுடன் ரூபா 931,000 இற்கான வாடகை வருமானம் ஒன்றினை சபை இழந்துள்ளது.

(உ) சபைக்குச் சொந்தமான ஹட்டன் நட்சத்திர சுற்றுவட்டத்தில் 08 கடைகள், ஒரு கடைக்கு ரூபா 7,500 வீதம் 2014 பெப்ரவரி 05 திகதி வரை பெறுமதி மதிப்பீடு செய்திருந்த போதும் ரூபா 1,500 வீதம் அறவிடப்பட்டு வந்துள்ளது அதன் பிரகாரம் 2014 ஆண்டின் போது ரூபா 66,000 இற்கான பண நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

2.3.3 நீதிமன்ற தண்டப்பண மற்றும் முத்திரைக் கட்டணம்

--------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த தொகைகள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் | 224,750 |
| முத்திரைக் கட்டணம் | 3,474,251 |

2.3.4 வீதவரி

-----------

வீதவரி அறவிடப்படும் 375 கடைகளில் இருந்து குறிப்பிட்டுள்ளவாறு பெறுமதி மதிப்பீடு செய்யப்படாமையால் சபைக்கு அறவிடப்பட வேண்டிய பாரிய வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.

2.4 மிகை விதிப்பு

----------------------

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் அதிகாரம் 255 பிரிவு 182(1) ஏற்பாடுகளின் கீழ் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகைவிதிப்பின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 அறவீடு செய்ய வேண்டியிருந்த மிகை விதிப்புகளின் பெறுமதி ரூபா 29,692 ஆகும்.

3 செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

3.1 செயலாற்றுகை மதிப்பீடு

--------------------------------------

வருடாந்த செயற்பாட்டு திட்டத்திற்கு இணங்கியமையினை உறுதிப்படுத்துவதற்காக பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றுகையினை காட்டும் முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் நிருவாக அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமான குத்தகைக்குக் கொடுத்துள்ள காணிகளை 05 வருடங்களுக்கு ஒரு முறையேனும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு குத்தகை மறுசீரமைக்கப்படுவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் சபை பாரிய வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.

(ஆ) ஹட்டன் வாடி வீடு தொடர்பாக, வாடி வீட்டு முகாமைக் கட்டணமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 736,736 இற்கான தொகையினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

3.3 சுற்றாடல் சார் அனுமதிப்பத்திரக் கட்டணம்

--------------------------------------------------------------------

1980 இன் 47 இலக்க சுற்றாடல் சார் சட்டத்தின் பிரிவு 23(அ) இன் கீழ் மற்றும் 2008 ஜனவரி 25 திகதிய சுற்றாடல் சார் இயற்கை வள அமைச்சரினால் வழங்கப்பட்டிருந்த இலக்கம் 1533/16 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டிய வர்த்தக நிலையங்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கியிருக்கவில்லை. 2014 செப்டம்பர் 18 திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய 34 வர்த்தக நிலையங்களுக்கு சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளாமையால் சபை இழந்துள்ள வருமானம் ரூபா 165,600 ஆகும்.

4 கணக்களி பொறுப்பும் நல்லாட்சியும்

---------------------------------------------------------

4.1 பாதிட்டுக் கட்டுப்பாடு

--------------------------------

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 06 வருமான விடயங்களில் நூற்றிற்கு 13 முதல் நூற்றிற்கு 278 வரையும், 04 செலவு விடயங்களில் நூற்றிற்கு 12 முதல் நூற்றிற்கு 95 வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 தீர்க்கப்படாத மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

---

2013 திசெம்பர் 31 திகதி வரை 12 கணக்காய்வு வினாக்களுக்கு பதில் அளிக்கப்படவில்லை.

4.3 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

---

அரச கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 4:2 பந்தியின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.4 அகக் கணக்காய்வு

---

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 133 மற்றும் 2009 ஜூன் 09 திகதிய டீஎம்ஏ/2009/01 கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிருவனத்தில் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) அகக் கட்டுப்பாடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) கடன் பட்டோர் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஈ) சொத்துக்கள் நிருவாகம்